DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NANNILAM

| | | |
|---|---|---|
| Case No. | : | CC No. 9 /2025 |
| Deposition of witness | : | P.W – 1 |
| Name | : | மல்லிகா |
| Father's /Husband Name | : | சின்னப்பா |
| Village | : | சலிப்பேரி |
| Taluk | : | நன்னிலம் |
| Age | : | 78 |
| Occupation | : | ஓய்வு |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 06th day of February2025.
Accused present.

**முதல் விசாரணை :–**

ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். நான் சலிப்பேரி நடுத்தெருவில் வசித்து வருகிறேன். கடந்த 26.11.2024 ம் தேதி விடியற் காலை 05.00 மணியளவில் நான் வீட்டில் படுத்திருந்தேன். அப்போது எனக்கு அருகில் கருப்பு நிற ஆடை அணிந்து கொண்டு எனக்கு பக்கத்தில் நாற்காலியில் அமர்ந்திருந்தார். நான் யார் என்று பார்த்த போது ஸ்ரீவாஞ்சியத்தை சேர்ந்த ஸ்ரீராம் என்று அடையாளம் கண்டேன். அவன் கையால் எனது கண்ணத்தில் அரைந்தார் அதன் பிறகு எனது கழுத்தை பிடித்து நெறித்தார். எனது வாயில் ஒரு துண்டை வைத்து அமுக்கி எனது கழுத்தில் அணிந்திருந்த பவுன் செயினை அறுத்துக் கொண்டு தெரு கதவை திறந்து கொண்டு வெளியில் ஓடினார். நான் சத்தம் போட்டேன். இது சம்மந்தமாக நன்னிலம் காவல் நிலையத்தில் 29.11.2024 ல் புகார் கொடுத்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் மனுவிலுள்ள கையொப்பம் என்னுடையது தான். அது நான் கொடுத்தது தான். அந்த புகார் மனுவிலுள்ள விவரங்கள் நான் சொன்னது தான். அந்த புகார் மனு **அ.சா.ஆ. 1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் நகை தான் என்னிடம் பறிக்கப்பட்ட நகையாகும் அந்த நகை அ.சா.பொ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. நான் கொடுத்த புகாரின் பேரில் போலிஸார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:–**

நான் சம்பவம் நடந்த உடன் போலிஸாருக்கு புகார் கொடுத்தேன் என்றால் சரிதான், அதுமட்டுமல்லாமல் 108 க் கும் போன் செய்து உதவி கேட்டேன். அவ்வாறு போன் செய்த உடன் சம்பவத்தினத்தன்றே போலிஸார் வீட்டிற்கு வந்தார்கள் என்றால் சரிதான். முதல் விசாரணை கூறிய விவரங்களை தான் போலிஸார் விசாரணையிலும் கூறினேன் என்றால் சரிதான். நான் கொடுத்த புகாரை யார் எழுதினார் என்றால் பதுமையன் என்பவர் எழுதி கொடுத்தார். எங்கு வைத்து எழுதினார் என்றால் காவல் நிலையத்தில் வைத்து எழுதி

கொடுத்தார். சம்பவம் நடந்த உடன் போலிஸார் சம்பவ இடத்திற்கு கைரேகை நிபுநர்களை அழைத்து வந்தார்களா என்றால் இல்லை சிசிடிவி கேமரா பதிவுகளை தான் பார்த்தார்கள். அதில் எதிரியின் உருவமும் அவர் அணிந்திருந்த கருப்பு சட்டையும் அதன் பின்னால் இருந்த எண்ணும் தெரிந்தது நான் அதனை போலிஸாரிடம் அடையாளம் காண்பித்தேன். அந்த நகையை எங்கு வாங்கினேன் என்றால் திருவாரூரில் 1999 ம் வருடம் ங்கினேன். போலிஸார் கைப்பற்றிய நகையை பார்த்தேனா என்றால் பார்த்தேன். அந்த நகை தங்க நகை என்றால் அதிலிருந்த ருத்திராட்ச மாலையின் கொப்பி நான் தங்கத்ததால் செய்தது மற்ற செயின் தங்கம் என்று சொல்லி தான் எனது மகன் என்னிடம் கொடுத்தார் ஆனால் அது தங்கமா என்று எனக்கு தெரியவில்லை. நான் தங்கமா என்று பரிசோதிக்கவில்லை என்றால் சரிதான். நான் சொல்வது போல் சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்றாலும் போலிஸார் சொல்லி கொடுத்து பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரி அடிக்கடி எனது வீட்டிற்கு வந்து செல்லும் நபர் என்றால் சரிதான். வேறு யாரோ திருடிய நகையை எதிரி மீது பொய் வழக்கு தாக்கல் செய்து பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரி எனது நகையை பறித்ததாக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல தற்போதும் எதிரி நகையை பறித்தற்கான தடயம் எனது கழுத்திலுள்ளது (சாட்சி கழுத்திலுள்ள தடயங்களை காண்பித்து சாட்சியமளிக்கிறார்). எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் தொடர்பில்லை என்றால் சரியல்ல.

(ஒம். M.S. பாரதிதாசன்)
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், நன்னிலம்.